**சார்பு நீதிமன்றம், துறையூர்.**

**முன்னிலை.திரு.C.விஜய்கார்த்திக்,M.A.,M.L.,**
**சார்பு நீதிபதி,**
**துறையூர்.**

**OS.No.83/2024**

தேதி: 13.10.2025

பெயர் : பெரியசாமி (வா.சா.1)    த/பெ: ராசு

**குறுக்குவிசாரணை**

1. வழக்கு சொத்து எந்த தேதியில் எந்த மாதத்தில் யாரிடம் இருந்து கிரையம் வாங்கினேன் என்றால் 2008ம் ஆண்டு பாலகிருஷ்ணன், கமலம், கிரிஜா ஆகியோரிடம் கிரையம் வாங்கினேன். மொத்த எவ்வளவு நிலம் வாங்கினேன் என வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் வாங்கிய நபரிடம் இருந்து தான் 2ம் பிரதிவாதி அவர் சொத்தை கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். நான் வாங்கிய சொத்தின் நிலத்தின் அளவு என்ன அளவோ அதே அளவை தான் 2ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். ஒரு அயிட்ட சொத்தில் கெட்டி மெத்தை வீடு கட்டி மாட்டு கொட்டகை அமைத்ததகாக கூறியுள்ள வீட்டிற்கு மின்இணைப்பு உள்ளதா என்றால் இல்லை. வழக்கு சொத்தின் சர்வே எண்.165/3A1 ஆகும். மொத்தம் 15 ஏர்ஸ் ஆகும். கெட்டி மெத்தை வீட்டின் கிழமேல் 33, தென்வடல் 21 ஆகும். 2ம் பிரதிவாதி என் உடன் பிறந்த தங்கை என்றால் சரிதான். நான் என் வழக்கில் மின்இணைப்பு, வீட்டு வரி ரசீது வாங்க பிரதிவாதிகள் முயற்சிப்பதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். பூசலுக்குரிய வழக்கு கட்டிடம் கட்டி 15 வருடம் இருக்கும் என்றால் 10 வருடத்திற்கு மேல் இருக்கும். அந்த இடத்தில் 2ம் பிரதிவாதி தான் குடியிருக்கிறார் என்றால் சரிதான். கெட்டி மெத்தை வீட்டில் இருந்து 2ம் பிரதிவாதியை காலி செய்ய காவல்நிலையத்தில் புகார் நான் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை, 2ம் பிரதிவாதிதான் என் மீது புகார் கொடுத்துள்ளார். புகாரின் அடிப்படையில் என்மீது என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும். பொய் புகார் என்மீது கொடுத்ததாக 2ம் பிரதிவாதியை தான் திட்டி போலீஸார் அனுப்பினார்கள்.

2. 2ம் பிரதிவாதியின் கணவர் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிகள் மீது உப்பிலியபுரம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். புகாரில் வழக்கு சொத்தில் பூசலுக்குரிய நிலத்தை பிரதிவாதிகள் காலி செய்து கொடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். இந்த புகாரில் நீதிமன்றம் மூலம் பரிகாரம் பெற்றுக்கொள்ள வேண்டும் என அனுப்பிவிட்டார்கள் என்றால் சரிதான். என்மீது 2ம் பிரதிவாதி முசிறியில் புகார் கொடுத்த விவரமும், நான் 1,2 பிரதிவாதிகள் மீது உப்பிலியபுரம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்த விவரமும் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின்படி 17.10.2025 அன்று ஒத்திவைக்கப்படுகிறது.

/ உண்மை நகல்/

(ஓம்/-C.விஜய்கார்த்திக்)
சார்பு நீதிபதி,
துறையூர்.